

உ
அன்பர் தபால்
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



உ

# அண்பர் தபால்



ஸத்திய வாக்கியம் (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசுவதால்; தர்மம் நிலை பெறும்!"

"ஸத் குரு திருவடி துணை!" "நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்ய ரூபேண!" "யத் பாவம் தத் பவதி"!

"ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெயஜெயராம் ஓம்"!

"அகம் பிரம்மம்; ஜெகம் பிரம்மம்; அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

# அன்பே உருவானன்/ நீயா!

வாக்கே அமிர்தம்! வாக்கே அக்கினி! வாக்கே வாழ்க்கை!
வாக்கே சாபம்! வாக்கே வரம்! வாக்கே பயபலிதம்!
வாக்கே முக்தியின் திறவுகோல்! வாக்கே எல்லாம்!
ஆகவே உன் எண்ணம்! சொல்!! செயல்களால்!!!
நீ உன்னுள், **அடங்கி** நிறை, எக்காரணம் கொண்டும், **அடங்காமல்!** உன் வாழ்க்கைப் பயணம், செய்வாயானால், அதுவே மாபெரும் **சாதனை** ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறேன்.




ஸத்யா! நித்யா! இவை ②
ஸத்யம்! நித்யம்!
என அழியாத பிரம
மந்தை தெரிவிப்பதாகும்.
அழியும் படிப்பும்!
பாடமும்! பதவியும்!
பட்டமும்! அந்தஸ்தும்!
கௌரவமும்! இந்த வித்யா எனப்படும்

# கலியுகத்திற்கு!

தேவைதான் ஆனால் உனக்கு வேண்டாம்.

ஆகவே அடங்கி வாழ்ந்து நவம் பெருகி **குணம்**
(ஸத்வகுணம்) **ஓங்கி!** ஆனந்தம் அடையலாயாக,
என வாழ்த்தி, ஆசீர்வதிக்கிறேன்.
உன் பெயர் நாமா! ஸ்ரீவித்யாவாகும்! உனக்கு **வித்யா**
தர்மம்! அறவாகாதே என, எண்ணிக்கொண், எமதய்யன் திருடன்!
(கண்ணன்) **நித்யா!** என, மாற்றினான் போலும்?
இதைப் போலவே, உன் சகோதரியான **புவன!**
பூமியின், கேள்விக்குறியாக, இருக்கிறதே என கருதிக்கொண்,
**பூமா!** என நாமத்தை மாற்றினான் போலும்?
பூமா என்றால் **பூமியின்** அம்ச **அம்மா!**
பூமா "
அதாவது, எம் ஸ்ரீ பூமி மாதாவின், "**பொறுமை!**"
வேண்டும் என்று தான், அவ்வாறு செய்தான் போலும்?
எமதய்யன் திருடன் என்னும் கண்ணன். இதன் ரகஸ்யத்தை,
அவன் ஒருவனே, அறியான். இந்த ஒழுங்கை தயாக்கொண்டு
வைதீகம் எதுவும் அறியாது. இதுவெங்கள் ஸ்ரீ பாதசேவை!



ஓ எம் அன்பியே நீயோ! உன் அன்பான தபால் கண்டோம். அதையாம் உடைக்கும் முன்பே, எடுத்தவனே உடைத்தான்! பிரித்தான்! உரக்கப் படித்தான். அவன் ஒவ்வொரு கேள்விகளையும், சுவைத்து! சுவைத்து! படிக்கும் போது! தலையை அசைத்து! அசைத்து! ரசிக்கும் போது! அவன் சிரசில், அணிந்திருந்த ஒற்றை மயில் பீலி! ஓர் இசையோடு அசைந்ததையே யாம் அனுபவித்தோம்! பலே ஜோர்! பலே ஜோர்!


நீயும்! உன் குடும்பத்தாரும், கொடுத்து வைத்தவர்களே!

இனி உன் கேள்வியையும்! அதன் பதிலையும்! வரிசையாக, அவன் தருகிறான். இதன் விபரம்

அசைப்பவன் அவனே! அசைவது

அவன் தை புதுமையே! வரைவது

அவன் கை பேனாவே! படிப்பது உன் தலைவிதியே! கருத்தான்றி உரையும்.




ஆத்மாவானது (4)
மாயாவை
சம்பந்தம் கொண்
டால் அது உபந
ரூபியின் நிலையில்
ஜீவகமாகும். அதே
ஆத்மா மனதை மறந்
தாக்கி! மாயாவையும்
தொடாமல் தனித்திருந்தால்
அது பரமாத்மாவாகி அனுபவ ஞானியாகி! அதுவே
ஆத்ம ஞானியாகி! அதுவே திட ஞானி ஆகும் என அறிக.

(1) கேள்வி:—

திட ஞானி! ஆத்ம ஞானி! அனுபவ ஞானி! என்று பல சொல்கிறோம். இம் மூன்றும், ஒன்றைத்தான் குறிக்கிறதா? அல்லது இவை ஒன்றுக்கொன்று, வேறுபாடு உள்ளதா? அப்படி வேறுபட்டதாயின், எப்படி வேறுபடுகிறது? தனித்தனியே, விளக்கம் தருமாறு, வேண்டுகிறேன்?

பதில்:— ஞானம் என்றால் அறிவு! அறிவு என்றால் ஆத்மா! இந்த ஆத்மாவே, பரமாத்மா ஆகும்! இந்த பரமாத்மாவே, பரப்பிரம்மம் என்றும், பர சொரூபம் ஆகும். தன்னை அறியும் அறிவை அறிந்தவனே! **அனுபவ** ஞானியாவான். இந்த அனுபவ, முதிர்ச்சியானவனே, (ஸ்வய அனுபவ) **ஆத்ம** ஞானியாவான். இந்த நிலை, **அறிவும்! பேரறிவும்!** கலந்த நிலையாகும். முந்தையவன் அனுபவம் பெற்று வருகிறான். பிந்தையவன் அனுபவம் பெற்று முதிர்ச்சி ஆகிக் கொண்டிருக்கிறான். மூன்றாவது உள்ளவன், பேரறிவு சொரூபத்திலேயே **நிலைத்து!** இருப்பவன் ஆகும் இவன்



அறிவு சொரூபத்திருந்து, அப்போதைக்கப்போது,

வந்து வந்து போவான். அறிவில்


நிலைத்திருப்பதில்லை! பேரறிவில் நிலைத்திருப்பான்!

இவனே கிட ஞானியாவன். ஆறுவிதம்

மூவிடமும், நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களின்

வாஸனை குணதோஷங்கள் அணுவும் இராது.

(2) கேள்வி:— ஸ்ரீ உத்தவகர் வருகை பகுதியில், அவர் ஓர் கிட ஞானி என்றும், ஒரு கிடஞானி! தாம் விரும்பும்! மறைந்த ஜீவன் முக்தனுடைய, தூலத்தை, காரண சரீரமாக, கொண்டிருப்பார் என்றும், குறிப்பிட்டுள்ளீர்கள். இவ் மறைந்த கிட ஞானி எனத் தாங்கள் குறிப்பிடுவது, ஸ்ரீ உத்தவகரையா? அப்படியானால் அவர் தாங்கி வந்த தூலம் எவருடையது?




பதில்:— இது பயனுள்ள கேள்வியும்! அதி அதி ரகஸ்ய மான, கேள்வியுமாகும். எம் **நித்யா** கவனம் தேவை.

இதில் கூறும், திட ஞானியானவன் **பரநிலை**

அதாவது, பர கருணையை **பூரணமாக! பெ**ற்றவனாக இருக்க வேண்டும்.

இந்த திட ஞானியானவன், தன் அன்பர்கள் நிமித்தமாக,

பல ஆயிரமோ! பல லட்சமோ! பல கோடியோ! தாவரங்களுக்கும், வாழ்ந்து காட்டிய, திட ஞானியோ! ஆத்ம ஞானியோ! அவர்களுடன் தொடர்புகொண்டும், நிமித்தமாக, **அரூப** சொரூபமாக, ஒரே **தற்காலிக தேகம்** எடுத்து, கொண்டு மறுமையும். இவனுக்கு யோகமாயாவின் கருணையுடன், யோகமாயா இக்காரியம் செய்யும்.



இதில் ஓர் உண்மையை உணரவும்.

(A) மனம்! பக்தி! இந்த ஜென்மம்! இனி இல்லை.
அவை அழிந்த நிலையில்தான், இது முடியும்.

(B) பேரறிவும், இந்த காரியம் செய்யாது.
பேரறிவில், எந்த நாமரூபமும், நிலைபெற முடியாது.
அறிவால் இக்காரியம், நடைபெற இடம் உண்டு.
அறிவில் தோன்றும் நாமரூபம் இடம், பெறவாய்ப்பு உண்டு.
ஆகவேதான் **பேரறிவின்** (யோகமாயாவின்) துணையுடன், **அறிவு** இக்காரியம் புரியும். என ஸ்ரீமகான்கள் சொல்வர்.

ஆகவே உத்தாவகர் தாவும், வரமுடியாது. வரக்கூடாது. வரவியலாது. அது அன்றே மண்ணோடு! பரந்தோடு! கலந்துமயமாகிவிட்டது என்பதே சத்தியம்.

ஆனால் அன்று வந்ததோ! பேசி விளக்கம் கொடுத்ததோ, பேரறிவும் அறிவும்! (யோகமாயாவும் போகமாயாவும்) அன்பர்களாகிய, உங்களுக்காக நடந்தது! **மாயா** நாடகமாகும். இதை மனதால், உணர முடியாது. இதை அறிவால் உணரமுடியும் இதுவே சத்தியம்.



யாம் தோன்றுவோம் எனச்
சொல்லவில்லை. யாம் எம்மை
தோற்றுவித்துக் கொள்கிறோம் எனச் சொன்னோம்

(8)

தர்மம் என்ற
சூரியனை
அதர்மம் என்ற மேகம்
தானிருந் போல் மறைக்
கும்போது எம்மை யாம்
ஓர் ரூட்சம வாயுவாக
தோற்றுவித்துக் கொண்டு
அக்காரிருள் மேகத்தை
கலைத்து என்புதும் உள்ளொளியில்
பிரகாசிக்கப் பண்ணுவோம். நன்காறும் இல்லை.
அவ்விரட்டைய மேகமும் இல்லை. ஆறவே யாமும் அழியாத
சூரியனாகவே இருக்கிறோம் என்பதே சத்தியம்.

(3)

கேள்வி:— மேலும் ஓர் இடத்தில், உத்தாவகர்! ஆறு முறை! உன்னோடு வந்தவனுக்கும்! எனதாங்களிடம் கூறுகிறீர். அப்படியானால், இதுதாங்களுக்கு, ஏழாவது பிறவியா? முந்தைய, ஆறு பிறவிகளைப் பற்றியும், தெரிந்து கொள்ள, ஆவலாக இருக்கிறது?

பதில்:— ஓம் அருமை கொழுந்தே! **நித்யா!**

இந்த உண்மையை உணர்:— எழுதியவன் திருடன், கண்ணன்! அதாவது **ஜகதாச்சாரியன்**


கடைசி ஸ்லோகத்தில், சொல்லும் வாசகத்தை, கவனி **தர்மம்** மறைந்து, **அதர்மம்** மேலோங்கும் போது!

தர்மத்தை! ஸ்தாபனம் பண்ணும், நிமித்தமாக, **எம்மை! யாம்! தோற்று** வித்துக் கொள்கிறோம்! என்று சொல்கிறேனே தவிர, **யாம்** தோன்றுவோம்! எனக் கூறவில்லை என்பதை **அறியுமாறு** உணர்வாயாக மனம் பக்குவப்பட்ட நித்யா!



இவ்வாசகத்தில் (9)
யாம் வருகிறோம்
என்றே வருவோம்
என்றே வந்தோம் என்றே
சொல்லவில்லை.
எம்மை / யாம் / தோற்
றுவித்துக் கொள்வோம்
என்றுவ் எம்மை என்பது
பரம் பொருள். யாம்
என்பது மாயாவாகும். எம்
மாயாவிருவ் எம்மீது அறியாமையால் மூடிய
கார்மேகத்தை விரட்டுவோம். பின் அங்கு மாயாவும்
இல்லை கார்மேகமும் இல்லை. யாம் சத்தியமாக ஜொலித்

இங்கு அந்த ஸ்ரீபரமாத்மா சொல்வது யோக
மாயா சம்பந்தமாகும். உன்னுடைய ஆறுமுறை
வந்தவனுக்கும் என சொன்னவனே யோக
மாயா சம்பந்தம் கொண்டவனாகும். ஆகவே,
இவ்வுடைய அவனையும் அவன் காரண அவன் காரியத்தையும்
மனதின் பிடியில் அகப்பட்டவர்களால் உணர முடியாது.
அறிவின் நிலைக்கு வாருங்கள். அவசியம்
உங்களால் உணர முடியும். கண்ணன் வாசகத்தில்
எம்மை / யாம் / தோற்றுவித்துக் கொள்கிறோம் என்பதில்
அதன் பொருள் என்ன? எம்மை என்பது மாயா நிலை!
யாம் என்பது ஸ்ரீபகவான் நிலையாகும்.
(இது அறிவின் விளையாட்டாகும்)




பேரறிவின் (பர
சொரூப அம்ச
மாகிய) திட ஞானி
யோகமாயாவின் உத
வியால் ஓர் உத்தாவக
ரை உண்டுபண்ணி
அதன் வேஷமாக ஒங்கும்
அன்பர்களுக்கு அவர்
ஜீவன் கொடுத்தாக ஒர்
பாவனையை காட்டிவிட்டு

(10)

நம்முள்ளிருந்து வந்த உத்தாவகரை திரும்பவும்
தம்முள்ளேயே ஈர்த்துக் கொண்டது யோகமாயா!
உத்தாவகர் வரவும் இல்லை அவர் மறையவும் இல்லை.

மாயாவும்/யாம் இயங்குவோம்
எனப்பொருள்படும். இதன் உண்மை என்னவென்றால்?
மாயா வேறு! யாம் வேறு! என பிரித்துக்காட்டுகிறேன்.
அப்படியானால், அதன் உள் பொருள் என்னவென்றால்
யாம் அசைவற்றவன். ஆனால் எம் மாயா வோ
அசையவும் செய்யும்! அசைக்கவும் செய்யும்!
எனப்பொருள்படும். அறிவுக்கே இத்தனை திறன் இருந்தால்?
பூரியகவான் நிலையில்
ஓர் திட ஞானி நிலையில், பேரறிவுக்கு
எத்தனை திறன், இருக்கக் கூடும் என்பதை உணர்வாயாகு.
ஆத்ம ஞானத்திற்காக, உருகி ஏங்கித் துடிதுடிக்கும்,
பக்குவ ஆன்மாக்களுக்காக, அத்தகையவர்க்கே
பரமே! யோகமாயாவின் துணையுடன், அந்த திட ஞானியாக
மூனி ஆறு முறையும், தற்சமயம் ஒன்று ஆகவும்
வந்திருக்கிறதென்று உணர்ந்தால் போதும்!!!



திடஞானி (11)


தோற்றுவிக்கக்
கொள்வானை யன்றி
தோன்ற மாட்டான்
அப்படி தோன்றுவது
யோகமாயாவாலே.
இந்த மனம் வசும் அகப்
பட்ட ஆன்மாக்களுக்கே
உணர முடியாததான். அறிவாலும் உணர முடியும்
பேறிவாலும் அதுவாகவே இருக்கலாம்.

அந்த பரகருணையின் நிலையை **நிறை** என்றும்,
அவதாரம் என்றும், சொல்லக் கூடாது! சொல்ல முடியாது!
சொல்ல இயலாது! அது வந்த நிலை, வாக்கால் சொல்லும்
நிலையில், வாக்கும் இல்லை! வழியும் இல்லை!

அதை ஓர் பிறவி எனச், சொல்லி முன் பிறவிகளைப் பற்றி
தெரிந்து கொண்டு, ஆசை கொண்டிருப்போரே! இது பொருத்தருள்.
**அவன்** பற்றி எழுத அந்த, ஏழை வைத்தியனுக்கு
திறன் இல்லையென, உன் திருவடி பணிந்து, வேண்டிக் கொள்கிறேன்.

(4) கேள்வி:— பக்கம் 54ல், கடைசியில் (ஸ்ரீ ஆதி
சங்கரருடைய, பஜகோவிந்தத்தில் எனக்குறிப்பிட்டிருக்கிறது)

நாலு வரிகளை, குறிப்பிட்டு அது இங்கே,
**நதோமைமாக**! அமைகிறது என,
கண்ணன் கூறுவதாக வருகிறது. அந்த நான்கு
வரிகளுக்கும், சற்று விளக்கி அருளாயு, பணிவுடன்
வேண்டுகிறேன்.



பதில் :— அந்த வரிகளை முதலில் எழுதுகிறோம். விளக்கம் பின்னால் தருகிறோம்.

(A) ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்!

(B) நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்!

(C) நிர்மோஹத்வே நிஶ்சலதத்வம்!


(D) நிஶ்சலதத்வே ஜீவன்முக்தி! என முடிகிறது.

இனி இதன் பொருள்.

---

(A) ஓர் சாதகனானவன், கடைத்தேற வேண்டுமெனில்? ஸாதுக்கள் **சேவையும்** அவர்களின் **ஸன்மார்க்க** போதனையும்! அவசியம் வேண்டும். அதுவே மன அமைதி! மனச்சாந்தி! மன ஓர்மை! என்ற **ஸாத்விகத்தை!** கொடுக்கும்.

(B) அந்த ஸாத்வீக குணம் பொறுமை! அன்பு! கருணை! பணிவு! கனிவு! எளிமை! இனிமை கொடுத்து **மோஹம்** தவிர்க்கும். அதாவது, போட்டி பொறாமையால் வரும், பணம்! சொத்து! அந்தஸ்து! பட்டம்! பதவி! ஆடம்பரம்! இவைகளை நாசம் செய்து, மோஹாவேசத்தை நாசம் செய்யும்.



மன மோஹம் தீர்ந்து, நசித்து, கெட்டழிந்தால்,
மனம் அசைவற்று **ஏகாக்ரசித்தத்து**
அதாவது ஸ்ரீ பகவன் நாமாவோ! குரு நாமாவோ! **டு**
அசையாமல் நிற்கும். அந்த சர்வாரம்பணம் முதலில்
கைகூடும்! பின் பிரம்மாரம்பணம் கைகூடும்.

(D) சர்வாரம்பணத்தால் **ஜீவ** நாசமாகும்.
பிரம்மாரம்பணத்தால் **மனம்** நாசமாகும்!
மனம் நாசமான, மோக்ஷமோ மற்ற சாதனம் அதுவே,
**ஜீவன்முக்தி!** எனப்படுகிறது.

இதை எம் கண்ணன் கூறும் போது:— மஹியாத்திரையில்
நடந்த, மூன்று ஸத் ஸங்கங்களிலும்! அதில்
பங்கேற்றோர் அனைவரும், ஜீவன் முக்திக்கு
**அதிகாரி** ஆகிவிட்டார்கள் என்றும்,
இதைப் போல, அத்வைதானந்த அநுபவம் உள்ள, ஸத்
ஸங்கங்களிலும், ச்ரத்தையுடன் ஈடுபட்டோர்
அனைவரும், ஜீவன் முக்தி பெறுவர் என, அறிவுறுத்திறேன்.




இருப்பாயாக (14)
என்றும் ஸத்யம்
அன்றும் இன்றும்
என்றும் என்றென்றும்
அழியாமல் இருப்பது போல்
இருப்பாயாக என மொழிந்தோம்.
வாழ்வாயாக என்பது நாம
ஜப ஸ்தோத்ரம் போல் போகும்
வரவு உள்ளதாகும். அது அநாவசியமாகும்.

(5)


கேள்வி:— பக்கம் 11இல் பிரணவத்தில் ஓர் எதிரொலி, ஒலித்தது. நெருங்காவம் வாழ்வாயாக! என ஒலிக்கவில்லை. நெருங்காவம் இருப்பாயாக என மட்டும் ஒலித்தது என எழுதியிருந்தது. இதன் பொருள் என்ன? வாழ்வாயாக! இருப்பாயாக! இதை சற்று விளக்கிக் கூறவும்? மேலும் ஓர் கேள்வி? அந்த ஒலி பரத்தின் ஒலியா? இந்த ஸத் ஸங்கத்தில், பர ஒலியாகவே, கண்ணன்! வியாச பகவான் (மற்றும் அனைவரும், அமர்ந்திருக்க இவர்களைத் தவிர) வேறு, எவரிடம் இருந்து வந்தது?

பதில்:— நெருங்காவம் **இருப்பாயாக!** வாழ்வாயாக என ஒலிக்கவில்லை என ஒலித்ததும் அவ் ஒலி **பரஒலியாகும்!** ஆதலால் அவ் ஒலியை முதலில் வந்த இருயோகிகள், வாக்காகவே அதாவது:- அவர்கள் வாக்கு:- நாங்கள் அக்கிர அவசரத்தால், எப்போ வருவாய் எப்போ வருவாய்? வந்து விடு! வந்து விடு! என்று, சொன்ன வாக்கை மாற்றி,



எங்கள் ஹிமாலயாவின், அனைத்து
யோகிகள் & ஸித்தர்கள்! அவரின் நிலையிலும்,
அனைவர்க்காகவும்! உன்னிருமையாகவும்!
மெய்யுணர்வாகவும்! நம்பும்! அனைத்து
மெய் அன்பர்களுக்காகவும்! நாங்காயம்
இருந்து அனைவரையும், கடைத்தேற வேணுமென்று,
உன் கண்ணன் சார்பிலும்! மற்றும் ஸ்ரீமந் நாராயண பொருள்
சார்பிலும்! வேண்டிக்கொள்கிறோமென முதலில்
அனைவரும்! வாழ்க்கை சாறினா.
இந்த வாழ்க்கையின், உள்ளே புகுந்து,
எங்கேயும் இருட்டின் கண்ணனும்! அவ்வாறு வாழ்ந்து
வருகையில் யாரும் சாறு, வாழ்ந்து கொண்டிருந்தனர்.
அங்கு பா ஒளியும் உண்டு. ஆறும் அருவி,
அங்கு இருப்பவர்கள், எவரும் சம்பந்தப்படவில்லை

(16)




முடிவில்:- தேவ தெய்வ அம்சமாகிய, நம் கண்ணனும் மறைந்தான். அப்போது வந்த பர ஒலியானது:- எம் தோற்றம் கண்ணனின் தோற்றம் கலிதோடி நிவர்த்தியின் தோற்றமாகும். இப்போது, உணர்த்துவது: உனக்கு சும்மா சுகமாயிரு! எல்லாம் நவமே!! எல்லாம் நவமே!! எல்லாம் நவமே!!! எனமும் முறை ஒலித்து விட்டு, இயல்பாகவே நடைபெறும் நடைபெறுவது நவந்தகாரியம்! நவமாய் நடைபெறும். நவமாய் முடிவுறும். என ஒலிக்க, ஒடுங்கி அடங்கியது. அதிசயத்தை அம்பர இல்லத்தில் நமஸ்காரம் செய்வோம்.



(17)

ஸ்ரீ கிடநாணி
யானவன்
அநேக தேவ தெய்வங்
களுக்கெல் ஆத்மா ஆவான்.
அநேக தேவ தெய்வங்
களும் அவனுள் ஆத்மா
வாக பிரகாசிக்கிறது.
ஆகவே வாழ்த்தும் இல்லை.
வாழ்த்துபவனும் இல்லை.
இருப்பது ஒன்றே
வாழ்த்தைப் பெறுபவனும் இல்லை. என்பதுதான் ஸத்தியம்.
நடப்பது நலமே!

எம் ஆனந்த குழந்தாய்! **நீயா**! அந்த
**கிடநாணிக்கு**! ஆணையிடுகிறது
எவரும் இல்லை! யென்பதே ஸத்தியம். அவன்
அநேக தேவ தெய்வங்களுக்கும் **எல்லா**
வற்றிற்கும் **ஆத்மா** ஆவான். ஆகவே அவனை,
வாழ்த்தவோ! ஆசி வழங்கவோ! எவரும்.
அவரும், எவரும், எவரும் இல்லாத தனிமையாய்
நெடுங்காலம் வாழ்வாயாக! என வாழ்த்தவோ!
ஆசி வழங்கவோ! எவரும் இல்லை.
ஆயுளும், வாழ்வாயாக என்றால் அது நாமரூபம்
சம்பந்தம் கொண்டதாகும். அவனோ நாமரூப,
குணம் இறி, கடந்தவனாகும். அவன் என்றென்றும்
ஒரே நிலையில் **இருப்பு** த்தன்மையோடு,
கூடியவனாகும். அவன் **இயக்க** தன்மை!
அற்றவனாகும். ஆகவே அநேகாவ அவனா!



(18)

நெருங்கவும் பொருந்தாது. ஆனால் அங்கு இருப்பாயாக என்பது, நேரவு பொருந்தும் என ஸ்ரீமஹான்கள், வாயிலாக அறிகிறோம்.


(6) கேள்வி:— பக்கம் 121ல், கடைசி ஐந்து வரிகள்:—

(A) ஸத்தியம் வாக்காகி, பர சொரூபத்தை சுட்டிக் காட்டும் போது, அதுவே **சூட்சும நாமரூபம்** பெறுவது, இறை சொரூபமாகும்.

(B) அதுவே (இறை சொரூபம்) வாக்காகி, சுட்டிக் காட்டும் போது, தூல **நாமரூப ஜகஜீவ** சொரூபமாகிறது.

ஆக இந்த மூன்றுக்கும், வாக்கே மூலமாகிறது என வருகிறது. இதை இன்னமும், சற்று விரிவாக, விளக்க வேண்டுகிறோம்.

பதில்:— ஸத்யம் என்பதை பிரித்து உணர்ந்தால்? ஸத் + யம் = ஸத்யம் ஆகும். ஸத் என்றால் **உண்மை** எனப் பொருள்படும். யம் என்றால் **இருக்கிறது** என பொருள்படும். ஆக மொத்தம்?



19

ஸத்யம் என்றால், உண்மை | உண்மையாகவே
**இருக்கிறது** | எனப் பொருள்படும்.
ஆக ஸத்கிற்கு | இருப்புத்தன்மை ஒன்றே பொருந்தும்
அந்த **ஸத்** | என்ற ஸத்தியத்தை | **அறிவு**
பூர்வமாக, வாக்கால் விளக்க வேண்டும் என்றால்?
அதன் அடுத்த நிலை:— **சூட்சுமநாமரூப** |
தெய்வங்கள் என்ற (ஸ்ரீபகவான்) ஆகும்.
அந்த தெய்வத்தை (ஸ்ரீபகவானை) வாக்கால், விளக்க
வேண்டும் என்றால்? அதன் அடுத்த நிலையாகிய,
**தூலநாமரூப** | ஜட ஜீவ, அகிலத்து
தோற்றங்களும் ஆகும் என, உணர வேண்டும். இவை
என்ன உணர்த்தப் படுகிறது என்றால்?
(A) ஸத்யம் என்பது ஒன்றே, (B) அது சற்று கீழ் இறங்கும்
போது, சூட்சும ஸ்ரீபகவானாகிறது, (C) அதுவே மேலும் கீழ் இறங்கும்
போது, தூல நாமரூப ஜட ஜீவ தோற்றம் அகிலமும் ஆகிறது.
என உணர்ந்தால் போதும்.



20

சுவையை! சுவை! அறியுமா? அச்சுவையை சுவைப்பவன் தனியாக இருந்தால் அவன் அறிவான். அவனே சுவையாக மாறி விட்டால் எது எதை விளக்கும்? அந்நிலையே ஞானியின் நிலையாகும். உன்னிடம் மாயம் இருப்பதால் கேள்வி கேட்கிறாய்! நீயும் அறிவாகி விட்டால் தெரியும்.

அப்படியாகுவீர்கள்! **எல்லாம் ஒன்றே!** என்பது, சத்தியமாக பிரகாசிக்கும்! என ஶ்ரீமகான்கள் வாயிலாக அறிகிறோம்.

7 கேள்வி:- பேரறிவு சொரூபமாயிருக்கும், திட ஞானி! அடிக்கொருதரம், அகண்டாகாரத்தை! சுவைப்பதாவதான்! அந்த ஆத்மஞான **போதை மயக்கம்!** அவனை ஆட்படுத்தி வருகிறது என்றும், குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இதுவே உன் கேள்வி? { இதன் பொருள் என்ன? அந்த போதை மயக்கம் எது? }

என கேட்டிருக்கிறாய் போலும்? இவ்வாசகத்தை, படிக்கும் போது எமதைய்யன் கண்ணை என்னும் **பக்தாத் திருடன்!** ஓர் மறுமொழி ஏமாவது, குலுங்கி குலுங்கி சிரித்துவிட்டான்.



நீ யாரிடம் கேட்பாய்? (21)
நீ யாரிடம் சொல்வாய்?
இவமருப்பற்ற நீயே
யாரும் உன்னுடைய
பருப்பற்ற இக்கேள்வி
அறிவாளிடம் செல்லாது
நீயே அறிவாளி விட்டால்
நீ எப்படி இருக்க முடியும்?
மனக் கேள்வியே யன்றோ
ஆகவே உன் கேள்வி
அறிவுக் கேள்வி அல்ல என்பதே ஸத்தியம்
முடிந்தது.


இந்த ஏழை பைத்தியம், காரணம் கேட்டது.

கண்ணன் :— இல்லை பாபா! இக்குழந்தையின் கேள்வி?

எந்த **ஆழமென்று** உணராமல்; **மேலோட்டமாக** கேட்கிறதே? எனக்குத்தான் சிரிப்பு வருகிறது. ஆனாலும் அக்குழந்தை! ஓர் **பக்தனை!** குழந்தைகள். அப்படி இல்லை யென்றுவ் (A) மடல்களை சுவைத்து படித்திருக்கவும் செய்யாது! (B) இப்படி ஆழமான கேள்விகளை கேட்டிருக்கவும் செய்யாது!

பைத்தியம் :— ஓ எம்பெருமானே! காருண்ய வண்ணா! அக்குழந்தை பக்தியில்! **இவ்விரு** பூமா சுந்தரா குழந்தைகள் மட்டும்! ஆர்வ புண்ணியம், இருப்பதாக இருக்கிறது என, உணர்கிறேன். காரணம்? **யாம்** தொடர்பை, நிர்ணயிக்க முடிகிறது.

கண்ணன் :— உன் மைந்தனே பாபா! **அவைகளும்** அதன் **பெற்றோரும்** நலம் பெற வாழ்த்துகிறோம் என ஆசி வழங்குகிறேன்.



22

வைத்தியம்:— ஆமாம் மாதவா! இக்கேள்விக்கு என்ன பதில், ஏது போகிறாய்?

கண்ணன்:— ஓஹ் அருமையப்பா! பத்தாவது வகுப்பு படிக்கும் மாணவி! B.A.! M.A.! முதலிய மேல் படிப்பை! **உணர துடிக்கிறது** போதும்? அதன் ஆர்வமே, அதன் அனுபவமாக அமையும்.

வைத்தியம்:— இக்கேள்வியை, **மேலோட்டமாக!** படிப்பவர்களுக்கு, மனம் வேலை செய்பவர்களுக்கு, அவர்கள் எண்ணம், எப்படி இருக்கும் என்றால்? நம் வீட்டில் வைக்கும் **மிளகு ரசம்** என மதித்துவிட்டு போதும்? என என்னா வியப்படைவர். **ஆழமாக!** உணரும் அன்பர்களுக்கு மட்டும், இக்கேள்வி **நாம்** கேட்கும் கேள்வியே? அந்த அன்பர் வேறு அல்ல! நாம் வேறு அல்ல! என்ற திடஉணர்வுடன், **நாமும் உவப்போம்!**



உ

௨௩


ஏன சுவைக்கத் துடிக்கும். அந்த சுவையின், ஏக்கமும்! உள்ளத் துடிப்பும்! **நம்பிகைக்கும்** அன்பர்களுக்கு, அநுபவமாகட்டும் என, ஆசீர்வதிக்கிறேன்.

கண்ணன் :- பதில் தொடர்கிறது. அம்மா கொழுந்தே, **நித்யா!** இக்கேள்வியானது, **அறிவு** சொரூபமாக, இருப்பவர்களுக்கே, சற்று சிரமமே! **பேரறிவு** சொரூபமாக, இருக்கும் ஞானிகளுக்கே, அந்த ஸ்வய அநுபவத்தை, ஓரளவு உணர முடியும்!

பேரறிவின் முதிர்ச்சியால், இருக்கும் **ஞானிக்கு** எச்சிரமமும் இல்லை. **[illegible]** அதுவாகவே இருப்பான். அவனுக்கு, விளக்கம் தேவை இல்லை. அவனே அகண்டாகாரமானவன். அகண்டாகாரமே அவனாவான். உன் சிற்றறிவுக்கு, உணரும் திறனில், இதை கோடிட்டு காட்டுகிறேன். உன் சிற்றறிவு! அறிவு என ஆகி, அவ்வறிவே! பேரறிவாக மாறும் போது, இதன் **ரகசியம்!** உணர்வாய் என, ஆசீர்வதிக்கிறேன்.

அகண்டத்தைக் காட்டியவர்,
கண்டேன் என்றேன் அனைத்தும் உடம்பு





# அகண்ட { ஏக ரஸம் என்றும், ஐக்கிய ரஸம் ,,

திருநீங்களில்
ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

Ⓐ அகண்ட ஏகரஸம் :— எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! எதிலுமாய்! பரந்து, விரிந்து, ஊசிநாட்டு இடமில்லாமல், சர்வ வியாபகமாக இருப்பது, பிரம்மானந்த சமுத்திரமே அது!


Ⓑ அகண்ட ஐக்கியரஸம் :— கோடானுகோடி, கோள்கள்! கோடானுகோடி, சூரிய சந்திரர்கள்! கோடானுகோடி, அண்டங்கள்! அவற்றின் சராசரங்கள் அவை அடங்கிய, உயிரினங்கள்! ஆக மொத்தமாக அனைத்திலும் உள்ள,

# ஜட | கட | படாதிகள் |

(அசையாதன / அஸ்தூலசரீரங்கள் / தாவர ஜங்கமங்கள்)

# ஆகிய எல்லா நாமரூபங்களாயும்!

இவ்வாறு பண்ணி! (உப்புகட்டியையும்! ஒரு ஐக்கியமானதுபோல், பனிக்கட்டியையும்! இவ்வாறு பண்ணி) ஒரே ஜலமயமாக இருக்குமே, பிரம்மானந்த சமுத்திரமே அது!



ஓர் உதாரணம்

(A) ஸ்ரீ சுகப்பிரம்ம ரிஷி, ஓரிடத்தில் உவமானமாக சொன்னார்

பொய் ஞானக்கம்! ஆனால் உண்மை யின்கருத்து

இந்த பிரம்மானந்த சமுத்திரத்தின், காற்று

கடற்கரைக்காற்று பட்டநிலையில், ஸ்ரீநாரத பகவான்!

திரிலோக சஞ்சாரியானார். (ஜலப்பரப்பை)

(B) இந்த பிரம்மானந்த சமுத்திரத்தில், அந்த ஜலப்பிர
வாகத்தை தூரத்தில் இருந்தே கண்ட


சுகப்பிரம்ம ரிஷி! அவதாரமானார்.

(C) இந்த பிரம்மானந்த சமுத்திரத்தை அருகில் சென்று


கண்ட மகேஸ்வரன் பித்துப்பிடி
த்த வைத்தியமானான்.

(D) இந்த பிரம்மானந்த சமுத்திர ஜலத்தில், ஓர்
உத்தாரணி அளவுதான், உட்கொண்டான்

(26)



**சதா சிவம்!** சர்வமும் சிவம் மயமாகி,
சதா சிவ சொரூபமாகி சமுத்திரத்திலேயே படுத்து
விட்டான் என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்
என ஸ்ரீ சுகப்பிரம்மம்! சொன்னதாக ஞாபகம்.
ஆகவே, அகண்டாகாரத்தின் பெருமை! இவ்வாறு இருக்க,
அந்த **அனுபவத்தை** நீ கேட்கிறாயே?
அதை சொல்லவோ! எழுதவோ! முடியாத ஒன்றாகும்.
அம்மட்டிலேயே, **ஸ்ரீ ஸத்குரு** வாக்காக,
1992ல் எப்படி இருந்தாய் என்றும்,
2002ல் ,, ,, ,, ,
2008ல் ,, இருக்கிறாய் ,, , அதை,
**மனம்! அறிவு** அப்போது எப்படி என்றும்,
**அறிவு! பேரறிவு** ,, ,, ,, ,
முடிவில் பேரறிவின் நிலையில், இருக்கும் ஒருவன் எப்படி




(27)

அந்த அகண்டாகாரத்தை, சுவைக்கிறேன் என்றும்,
இறுதி/ தோடிட்டு காட்டி இருப்பார்கள். இதை,

**உண்பவன்** தான் உணரமுடியுமே யன்றி,
**காண்பவன்** உணர முடியாது. உணர இயலாது.

இதைக்கண், ஓர் அன்பர், அனுபவ வாக்காக, சொல்லும்போது,
**கண்டவன்** கிடையாது என்றும், அதை காண முடியாது! இயலாது! என்றும்,
**விண்டவன்** (சொன்னவன்) கண்டதில்லை! என்றும். அப்படி சொன்னார், அனுபவமே மெய் சத்தியமே
யன்றி, உண்மை இல்லை என்பதையும், உணர்வாயாக.
தன் கண்ணை தான் காண முடியுமா? நெருப்பு தன்னை தானே எரிக்குமா?
முடியாது! முடியாது! முடியாது! இதுவே சத்தியம்.
மேலும் மனக்கண்களால், கண்டு கொண்டிருப்பவர்களுக்கு,
உணர்வின் சுவையை, எப்படி உணர்த்த முடியும்?
ஆதலும் **அதை** காண முடியாது. **அவனை** காண முடியும்.
அவனையே கண்டு உணராதவர்களுக்கு, அதை எப்படி உணர்த்த முடியும்? ஆனாலும் **உணரமுடியும்**



28

உன் போன்று உருக்கமும்! ஏக்கமும்! கண்ணீர் பெருக்கமும்! இவ்வாக்கியங்களில், பரிபூரண

**சிரத்தையும் நம்பிக்கையும்**

இச்சமயத்தில், வேறு எதையும் நாடாமலும்! உன்னை யல்லால், வேறு கதி இல்லை என்ற நிலையில்!

**வைராக்கியமும்** உடையவர்களுக்கே

அவசியம் முடியும் இது சத்தியம்!

அம்மா! **நித்யா!** இத்துடன் உன்,

ஏழு கேள்விகளுக்கும், அவன் அருளால், அவன் கை வசமையின் நிலையில்! அவன் **வேளை**யால்!

எழுதப்பட்டதை, சிரத்தையுடன் அனுபவித்து, அது நாமே! என ஆக, ஆசிர்வதிக்கிறோம்.

இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!

எல்லாம் ஒன்றே! அது சிவமே!

**பாபா.**

அது யாரோ! யாரோ அது! அது வேறில்லை சத்தியம்!



(29)

# ௧ ஓர் தேவரகஸ்யம்!!!

அன்பான ஞானக் குழந்தைகளே! உங்களோடு, உங்களில் ஒருவனாக, அப்பா வாகவும்! ஸ்வாமிஜி ஆகவும்! ஓர் வைத்தியமாகவும்! தூல சஞ்சாரம், செய்து கொண்டிருக்கும், நாமரூப பிண்டம்! அது ஒரு தோற்றமாத்திரமே! அது அநித்தியமாகிய, அஸத்தியமே! ஆகும்.

௨ வாக்கு வடிவிலும்! வரி வடிவிலும்! (தபால்கள் & அச்சிட்ட மடல்களும்) உங்களுக்காகவே தொடுப்பது, ஸ்ரீபகவான் ஆகும்.

௩ அவ்வாக்கிலும் & அவ்வரியிலும்! அவரவர்க்கேற்ற, கருத்தின், ரஸாம்ஸம் அமைந்ததும், உங்களுடைய ஸ்வயஞானம் ஆமே!

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

வியாச வடிவேல்!




Abode of Love

You Are Everything!